பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 04 2025 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வக்ஃப் வாரியத்தில் மகளிர் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கான அம்சங்கள் வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. நாடு முழுவதும் ரயில் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தும் பணி நடைபெற்று வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. வேவ்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்குமாறு சிலிக்கு, இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

4. மாற்றுத்திறனாளிகளின் கல்வி மேம்பாட்டிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

5. உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியின் தொடக்க விழா இன்று அர்ஜென்டினாவின் **Buenos Aires** –ல் நடைபெறுகிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<<<>>>>>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் தற்போது நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, வக்ஃப் வாரியத்தில் மகளிர் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கான அம்சங்கள் இந்த சட்டத்திருத்த மசோதாவில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த மசோதாவின் சிறப்பு அம்சங்கள் குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கி, சவுதி அரேபியாவில் உள்ளதுபோல, ஒருங்கிணைந்த டிஜிட்டல் பதிவையும் இந்த மசோதா உறுதி செய்வதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற நாடுகளைபோல் அல்லாமல், வக்ஃப் நிர்வாகம் மத்திய மற்றும் மாநில வாரியங்களை கொண்டு செயல்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவை வரவேற்பதாக மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வக்ஃப் வாரியத்தில் பெண்களுக்கு இடம் வழங்க இந்த மசோதா வகை செய்வதாக குறிப்பிட்டார்.

இந்த மசோதா எந்த மதத்திற்கும் எதிரானது அல்ல என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

பல்வேறு தவறுகளை திருத்தும் நோக்கிலேயே இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வக்ஃப் வாரியத்தின் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கு வக்ஃப் சட்டத்திருத்த மசோதா உதவிடும் என்று அகில இந்திய **Pasmanda Muslim Mahaaz**-ன் தலைவர் திரு **Shariq Adeeb** கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், முறைகேடுகளை தடுக்கவும் இந்த மசோதா வகை செய்யும் என்று கூறினார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் ரயில் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தும் பணி நடைபெற்று வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அடுத்த ஒன்றரை வருடங்களுக்குள் போதிய அளவு கண்காணிப்பு கேமராக்கள் ரயில் நிலையங்களில் செயல்பாட்டில் இருக்கும் என்று குறிப்பிட்டார்.

ரயில் பயணத்தின்போது மகளிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கென பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதற்கென மண்டலங்கள் வாரியாக கட்டுப்பாட்டு அறைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>

ஊரகப்பகுதிகளில் அதிவேக இணையதள சேவைகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் **Pemmasani Chandra Sekher** கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நாடு முழுவதும் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகளுக்கு பாரத் நெட் திட்டத்தின்கீழ், இணையதள சேவை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு நான்கு-ஜி சேவை அளிக்கப்படுவதாகவும் டாக்டர் **Pemmasani Chandra Sekher** தெரிவித்தார்.

<<<<<<>>>>>

குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதா இன்று மாநிலங்களவையில் நிறைவேறியது.

முன்னதாக, மத்திய இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் இந்த மசோதாவை தாக்கல் செய்தார்.

இதனைத்தொடர்ந்து, இம்மசோதா மீதான விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு அபிஷேக் மனு சிங்வி, தற்போதைய வடிவில் இந்த மசோதாவை எதிர்ப்பதாக குறிப்பிட்டார்.

இதில் பெரிய அளவில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிஜேபி உறுப்பினர் திருமதி ரேகா சர்மா பேசுகையில், இந்த மசோதாவை கண்ணை மூடிக்கொண்டு காங்கிரஸ் எதிர்ப்பதாக குறை கூறினார்.

<<<<<<>>>>>

போதைப்பொருளினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கடந்த நான்காண்டுகளில் 50 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு **B L** வர்மா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தொடக்கத்தில் தேர்வு செய்யப்பட்ட 272 மாவட்டங்களில் இந்த விழிப்புணர்வு நடத்தப்பட்டதாக கூறினார்.

தற்போது அனைத்து மாவட்டங்களுக்கும் இது விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்படுவதாகவும் திரு **B L** வர்மா கூறினார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் 728 ஏகலைவா உண்டு உறைவிடப்பள்ளிகள் ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு **Durgadass Uikey** கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதன்மூலம், 3 லட்சம் பழங்குடியின மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றார்.

இதுவரை 721 பள்ளிகளை தொடங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

50 சதவீத பழங்குடியினர் வசிக்கும் வட்டாரங்களில் இந்த பள்ளிகள் ஏற்படுத்தப்படுவதாகவும் திரு **Durgadass Uikey** தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு **Jual Oram** கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதில் மத்திய அரசின் பங்கு 15 ஆயிரத்து 336 கோடி ரூபாய் என்றார்.

மாநில அரசுகளின் பங்கு 8 ஆயிரத்து 768 கோடி ரூபாய் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் குறித்து உரிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

வேல்ஸ் உச்சிமாநாட்டில் சிலி பங்கேற்குமாறு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

தகவல் ஒலிரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் புதுதில்லியில் அந்நாட்டு கலாச்சாரத்துறை அமைச்சர் **Carolina Arredondo**–வை சந்தித்து அழைப்பு விடுத்ததாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தியா – சிலி இடையேயான கலாச்சார உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பினபோது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மாற்றுத்திறனாளிகளின் கல்வி மேம்பாட்டிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

உலக ஆட்டிசம் தினத்தையொட்டி, சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் இயங்கிவரும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிறுவனத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி கற்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு ஆர் என் ரவி வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

ரிசர்வ் வங்கியின் துணை கவர்னராக திருமதி பூனம் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இவர், மூன்றாண்டுகளுக்கு இப்பொறுப்பினை வகிப்பார் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மத்தியப்பிரதேச காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இரண்டு பெண் நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, சத்தீஸ்கர் எல்லையையொட்டிய மண்டலப்பகுதியில் காவல்துறையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உயிரிழந்த பெண் நக்சலைட்டுகளுக்கு 28 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்தாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

கர்நாடகாவில் கோடை வெயலின் தாக்கத்தை கருத்தில்கொண்டு ஒன்பது மாவட்டங்களில் அரசு அலுவலகங்கள் காலை எட்டு மணிமுதல், பிற்பகல் ஒன்றரை மணிவரை மட்டுமே செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாத இறுதிவரை இது செயல்பாட்டில் இருக்கும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

தைவானுக்கு எதிரான சீனாவின் ராணுவ ஒத்திகை கண்டனத்திற்குரியது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

தைவானுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதில் உறுதியுடன் உள்ளதாகவும் அமெரிக்க அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியின் தொடக்க விழா இன்று அர்ஜெண்டினாவின் **Buenos Aires** –ல் நடைபெறுகிறது.

இந்தியாவின் சார்பில் **Manu Bhaker** தலைமையிலான 43 பேர் கொண்ட அணியினர் இதில் பங்கேற்கின்றனர்.

---------------

**Burundi** சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அஞ்சலி ரதி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 6-3 என்ற செட் கணக்கில், நேபாளத்தின் **Abhilashi Bista** –வை வென்றார்.

----------

**Phukat** சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Rounak Chouhan** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-6, 21-12 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Henrikho Wivowo Kho**-வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Aditi Bhatt** 21-12, 21-14 என்ற செட் கணக்கில், சிங்கப்பூரின் **Lee Xin Yi Megan** –ஐ வென்றார்.

--------------

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Jadumani Singh** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பிரேசிலில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், இங்கிலாந்தின் **Ellis Trowbridge** –ஐ வென்றார்.

**<<<<<<>>>>>**